விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆவணி - 25 வெள்ளி 10.09.2021 மலர் - 2, இதழ் - 157

# ஒரு கண்ணில் வெண்ணை மறு கண்ணில் சுண்ணாம்பு





தி.மு.க ஆட்சிக்கு வந்தது முதல் கோயில்கள் இடிப்பு, வழிபாட்டுத் தடைகள், வெள்ளி, சனி ஞாயிறுகளில் கோயில்கள் அடைப்பு என பெரும்பான்மை ஹிந்துக்கள் மீதான விஷத்தை கக்கி வருகிறது. இது குறித்துத் தெரியாத அப்பாவி ஹிந்துக்களை ஏமாற்ற ஹிந்துக்களுக்கு ஆதரவாக இருப்பதாக ஒரு மாயத்தோற்றத்தை ஏற்படுத்தி அவர்களுக்கு இலவச மொட்டை போடுகிறது.

மற்றொரு புறம் தனது சிறுபான்மையினர் மீதான பாசத்தை காட்டும் விதமாக அரசின் செலவில், ஜெருசலேம் செல்ல மானியம் அர்திகரிப்பு, உலமாக்களுக்கு இலவச சைக்கிள், திருமண உதவித்தொகை, கிறிஸ்தவ உபதேசியார்களுக்கு நலவாரியம் என வாரி வழங்குகிறது. இதுதான் ஸ்டாலின் கூறும் மத நல்லிணக்கமா?

சிறுபான்மையினர் நடத்தும் மதரசாக்கள், தேவாலயங்கள், கல்வி நிறுவனங்கள் உள்ளிட்டவைகள் மூலம் அரசுக்கு ஒரு பைசாகூட வருமானம் இல்லை. ஆனால், மக்களின் வரிப்பணம்தான் கோடிக்கணக்கில் செலவு செய்யப்படுகிறது. அதேசமயம், ஹிந்துக்களின் கோயில்களை ஹிந்து அறநிலையத்துறை என்ற பெயரில் ஆக்கிரமித்து வைத்துள்ள தமிழக அரசு, அதன் பல்லாயிரம் கோடிகள் வருமானத்தை கபளீகரம் செய்கிறது.

இவ்வளவு வருமானம் இருந்தும் விளக்கு ஏற்ற வழியில்லாத, ஒருகால பூஜைக்கும் கையேந்தும் கோயில்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. கோயில் அர்ச்சகர்களுக்கு சொற்ப உதவித்தொகை, கோயில்களில் திருட்டு, கோயில் நிலங்கள் திருட்டு, ஆளும்கட்சியினர் அராஜகம், அபகரிப்பு, ஆக்கிரமிப்பு, சடங்கு சம்பிரதாய மீறல்கள் என தி.மு.க அரசால் ஹிந்துக்களுக்கு வேதனைகள்தான் மிச்சம்.

இந்நிலையில், வெந்த புண்ணில்வேலை பாய்ச்சுவதுபோல, கொரோனாவை காரணம் காட்டி விநாயகசதுர்த்தி நிகழ்ச்சிக்கு தடை விதித்துள்ளது தி.மு.க அரசு. கொரோனா வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படும் என ஹிந்து அமைப்புகள் அளித்த உறுதி, செவிடன் காதில் ஊதிய சங்காய் போனது. ஆனால், இதே காலகட்டத்தில் தூத்துக்குடி ஆரோக்கிய மாதா தேவாலயம் உட்பட பல்வேறு கிறிஸ்தவ விழாக்களை நடத்த அனுமதியளித்து அதற்கு பாதுகாப்பும் அளிக்கிறது தி.மு.க அரசு.

ஹிந்து விழாக்களில் கொரோனா பரவும் என்றால் கிறிஸ்தவ முஸ்லிம் மத விழாக்களில் பரவாதா, முதல்வர், அமைச்சர்கள் உட்பட ஆளும் கட்சியினர் நடத்தும் நிகழ்ச்சிகளில் கொரோனா விதிமுறைகள் பின்பற்றப்படுகிறதா? கொரோனா குறைந்துவிட்டது என கூறி சினிமா தியேட்டர்கள், மால்கள், பள்ளிகளை திறக்கும் தி.மு.க அரசு, ஹிந்து விழாக்களின்போது மட்டும் கொரோனா அதிகரிக்கிறது என கூறுகிறதே, இதில் எது உண்மை?

# முதல்வருக்கு வாழ்த்து அட்டை



தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை கூறியபடி, தமிழக பா.ஜ.க சார்பில், தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு விநாயகர் சதுர்த்தி வாழ்த்து அட்டை அனுப்பும் நிகழ்ச்சி, தமிழக பா.ஜ.கவின் தலைமையகமான கமலாலயத்தில் நடைபெற்றது. இதில், பா.ஜ.க தலைவர்கள் பலர் பங்கேற்று, ஸ்டாலினுக்கு தபால் அட்டையில் வாழ்த்து செய்தி அனுப்பினர். இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில பொதுச்செயலர் கரு. நாகராஜன், தமிழகத்தில் 87 சதவீதம் ஹிந்துக்கள் வாழ்கின்றனர். ஆனால் முதல்வர் ஸ்டாலின், ஹிந்து பண்டிகைகளுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில்லை. இது ஒரு மதச்சார்பு அரசாகவும், தி.மு.க மதச்சார்பு கட்சியாகவும்தான் உள்ளது. நாங்கள் வாழ்த்து தெரிவிப்பதன் மூலமாவது, இம்முறை விநாயகர் சதுர்த்திக்கும், வரக்கூடிய ஹிந்து பண்டிகைகளுக்கும் ஸ்டாலின் வாழ்த்து தெரிவிப்பாரா என்று பார்க்கிறோம். விநாயகர் சதுர்த்திக்கு தடை விதிப்பது வேதனையானது. குறைந்த இடத்திலாவது, விநாயகரை வைத்து வழிபட அனுமதி தர வேண்டும்' என கூறினார்.

# பொய் சொல்லும் செந்தில் பாலாஜி



இயக்குனர் தங்கர் பச்சான் விடுத்துள்ள அறிக்கையில், 'நான் மின் கட்டணத்தை சரி பார்க்க கோரிக்கை விடுத்ததாகவும், உடனே என் வீட்டுக்கு அதிகாரிகளை அனுப்பி மின் கட்டணம் குறித்த என் கோரிக்கையை உடனே சரி செய்து விட்டதாகவும், அதற்கு நான் மன்னிப்பு கோரியதாகவும் இரண்டாவது முறையாக உண்மைக்கு புறம்பான செய்தியை அமைச்சர் செந்தில் பாலாஜி மீண்டும் சட்டசபையில் கூறியுள்ளார் மின்சாரத்துறை அமைச்சர் செந்தில் பலாஜி. ஆனால், நான் மின் கட்டணத்தை சரி பார்க்க கோரிக்கை விடுக்கவில்லை. தேர்தல் சமயத்தில், முதல்வர் அறிவித்த வாக்குறுதியான மாதாந்திர மின் கட்டண முறையை செயல்படுத்தவே கோரியிருந்தேன். மின் கட்டணம் பல மடங்காக செலுத்த வேண்டியுள்ளது. இது என் வீட்டு பிரச்னை மட்டுமல்ல, தமிழகத்தில் உள்ள அனைவரின் வீட்டு பிரச்னையும்தான் என்பதையும் அமைச்சருக்கு நினைவூட்டுகிறேன். இப்போதாவது, மின்துறை அமைச்சர் என் கோரிக்கையை உணர்ந்து, இதனை முதல்வரின் கவனத்திற்கு கொண்டு செல்வார் என நம்புகிறேன்' என கூறியுள்ளார்.

# சென்னை ஐ.ஐ.டி முதலிடம்

மத்திய கல்வி அமைச்சகம் ஆண்டுதோறும் சிறந்த கல்வி நிறுவனங்களுக்கான பட்டியலை வெளியிடுகிறது. அவ்வகையில் இந்த ஆண்டுக்கான பட்டியலை மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் வெளியிட்டார். அதில், ஒட்டுமொத்த அளவில் சிறந்த கல்வி நிறுவனமாக சென்னை ஐ.ஐ.டி முதலிடம் பிடித்துள்ளது. 2ம் இடத்தில் பெங்களூரு ஐ.ஐ.எம், 3ம் இடத்தில் மும்பை ஐ.ஐ.டியும் இடம் பெற்றுள்ளன. சிறந்த பல்கலைக் கழகங்கள் பட்டியலில் பெங்களூரு ஐ.ஐ.டி முதலிடத்திலும், டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம் 2ம் இடத்திலும், வாரணாசி பணாரஸ் ஹிந்து பல்கலைக் கழகம் 3ம் இடத்திலும் உள்ளது. மேலாண்மைப் பிரிவில் அகமதாபாத் ஐ.ஐ.எம் முதலிடம், பெங்களூரு ஐ.ஐ.எம் 2ம் இடம், கோல்கட்டா ஐ.ஐ.எம் 3ம் இடம் பெற்றன. பொறியியல் கல்லூரிகளில் சென்னை ஐ.ஐ.டி முதலிடம், டெல்லி ஐ.ஐ.டி 2ம் இடம், மும்பை ஐ.ஐ.டி 3ம் இடம் பிடித்துள்ளன. சிறந்த கல்லூரிகள் பட்டியலில் டெல்லியில் உள்ள மிரண்டா ஹவுஸ் கல்லூரி முதலிடத்தையும், அதே டெல்லியில் உள்ள லேடி ஸ்ரீராம் பெண்கள் கல்லூரி 2ம் இடமும், 3ம் இடத்தில் சென்னை லயோலா கல்லூரியும் இடம் பிடித்துள்ளது. இதனைத்தவிர தமிழகத்தைச் சேர்ந்த கோவை அமிர்தா விஸ்வ வித்ய பீடம் பல்கலைக் கழகம், பி.எஸ்.ஜி.ஆர் கிருஷ்ணம்மாள் பெண்கள் கல்லூரி, சென்னை மாநிலக் கல்லூரி போன்றவையும் இந்த பட்டியலில் இடம் பிடித்துள்ளன.


INDIA RANKINGS 2021
National Institutional Ranking Framework

| Overall |
|---|
| Indian Institute of Technology Madras |
| Indian Institute of Science, Bengaluru |
| Indian Institute of Technology Bombay |
| Indian Institute of Technology Delhi |
| Indian Institute of Technology Kanpur |
| Indian Institute of Technology Kharagpur |
| Indian Institute of Technology Roorkee |
| Indian Institute of Technology Guwahati |
| Jawaharlal Nehru University, New Delhi |
| Banaras Hindu University, Varanasi |

# அடாவடி காவல்துறையினர்

தென்காசி மாவட்டம் புளியங்குடியில் சாலையோரம் விற்பனைக்கு வைத்திருந்த விநாயகர் சிலைகளை அப்பகுதி காவல்துறையினர் அத்துமீறி பறிமுதல் செய்து காவல் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். அப்பகுதி மக்கள் இதனை கண்டித்தனர். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் பரவியது. இதனையடுத்து, சிலைகளை அளவு பார்ப்பதற்காக காவலர்கள் எடுத்து வந்தனர். அவை உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன” என ஒரு சப்பைக்கட்டு வாதத்தை முன்வைத்தார் ஆய்வாளர் ராஜாராம். அளவுக்காக என்றால் அங்கேயே அளக்கலாமே, அதற்காக பறிமுதல் செய்ய வேண்டுமா என்ன? முன்னதாக, சில நாட்களுக்கு முன், மேற்கு தாம்பரத்தில் ஒரு ஹிந்து அமைப்பு நிர்வாகியின் வீட்டில் இருந்து, பொது இடங்களில் விநாயகர் சிலைகளை வைத்து வழிபடத் தடை இருப்பதாகக்கூறி விநாயகர் சிலைகளை பறிமுதல் செய்தனர் காவல்துறையினர். அந்த சிலைகளை அவர்கள் பொது இடத்தில் வைக்கின்றனரா, தனியார் இடத்தில் வைக்கின்றனரா என தெரியாமலேயே சந்தேகம் காரணமாக சிலையை எடுத்துச் சென்றதும் அராஜகம்தான். இது போன்ற செயல்களில் ஈடுபட்ட காவல்துறையினர், அதிகாரிகள் மீது தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கூறியுள்ளனர்.

# நீர் நிலை வனங்கள் ஆக்கிரமிப்பு



தமிழகத்தில் உள்ள அனைத்து நீர்நிலைகளிலும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். அதனை தமிழக தலைமை செயலாளர் உறுதி செய்ய வேண்டும். நீர் நிலைகள் பழைய நிலைக்கு கொண்டுவரப்பட்டால்தான் வருங்கால சந்ததிகளுக்கு அவை பயனுள்ளதாக இருக்கும். குடியிருப்புகள் உள்ளிட்ட வளர்ச்சி பணிகள் தேவைதான். ஆனால், அதற்காக நீர் நிலைகளையும், வனப்பகுதிகளையும் வளர்ச்சி பணிகள் என்ற பெயரில் அழித்துவிடக்கூடாது. சென்னையில் மட்டும் 950 நீர் நிலைகள் காணாமல் போய் உள்ளன, அவை ஆக்கிரமிக்கப்பட்டு கட்டிடங்களாக மாறியுள்ளன. எனவே, நீர் நிலைகள், வனப்பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை தமிழக அரசு அகற்ற வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# ஜவுளி உற்பத்திசார் ஊக்கத்தொகை



நடப்பு 2021 22 நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் பாரதத்தின் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கவும் ஏற்றுமதியை அதிகரிக்கவும் உற்பத்திசார் ஊக்கத்தொகைதிட்டம் என்ற முன்னோடி திட்டம் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தை செயல்படுத்த முதற்கட்டமாக மோட்டர் வாகன உதிரி பாகங்கள், மருந்து தயாரிப்பு, எரிசக்தி, பேட்டரி, சூரியசக்தி, உருக்கு, ஜவுளி, உணவுப் பதப்படுத்துதல் உள்ளிட்ட 13 துறைகள் தேர்வு செய்யப்பட்டன. இதற்காக அடுத்த 5 ஆண்டுகளுக்கு ரூ. 1.97 லட்சம் கோடியை படிப்படியாக ஒதுக்க திட்டமிடப்பட்டது. இந்நிலையில் டெல்லியில் பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், இந்த ஊக்கத்தொகை திட்டத்தின்கீழ் ஜவுளித் துறைக்கு ரூ. 10,683 கோடி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. செயற்கை நூலால் தயாராகும் ஆடைகள், துணி உற்பத்தி, 10 ஜவுளி தொழில்நுட்பம் சார்ந்த பிரிவுகளில் உற்பத்தியை ஊக்குவிக்க இந்த நிதி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் ஜவுளி உள்நாட்டு உற்பத்தியும் ஏற்றுமதியும் அதிகரிக்கும் என மத்திய அமைச்சர் அனுராக் தாக்குர் கூறினார்.

# தனியார் பாதுகாப்பு ஊழியர்கள் கைது



கேரளாவில் சில தனியார் பாதுகாப்பு ஊழியர்கள் துப்பாக்கிகளுடன் இருக்கும் புகைப்படம் சமூக வலைத்தளத்தில் வெளியானது. இதனையடுத்து அந்த 18 தனியார் பாதுகாப்பு பணியாளர்களையும் அம்மாநில காவல்துறையினர் கைது செய்தனர். அவர்கள் தங்கி இருந்த இடத்தை சோதனை செய்தபோது அங்கிருந்து 19 துப்பாக்கிகள், 100 துப்பாக்கி குண்டுகள் கைப்பற்றப்பட்டன. விசாரனையில் அவர்கள் அனைவரும் ஜம்மு காஷ்மீரின் ரஜௌரி பகுதியை சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

# விமானப்படைக்கு C295 விமானங்கள்



இந்திய விமானப்படைக்கு 56 Airbus C295MW ஸ்ரேடஜிக் நடுத்தர எடைதூக்கி ராணுவ விமானங்கள் வாங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இந்த விமானங்கள் தற்போது இந்திய விமானப்படையில் செயல்பாட்டில் உள்ள அவ்ரோ விமானங்களுக்கு மாற்றாக படையில் இணைக்கப்பட உள்ளன. இதில் 16 விமானங்கள் பறக்கும் நிலையிலேயே ஸ்பெயினில் இருந்து நேரடியாக வரவழைக்கப்படும். மீதமுள்ள 40 விமானங்கள் பாரதத்தின் டாடா குழுமத்தால் பாரதத்திலேயே தயாரிக்கப்படும். அனைத்து விமானங்களிலும் நமது தயாரிப்பு மின்னணு போர்தளவாட கருவிகள் இணைக்கப்படும். ஒப்பந்தம் கையெழுத்தான முதல் 48 மாதங்களில் ஏர்பஸ் நிறுவனம் 16 விமானங்களையும் டெலிவரி செய்யும். டாடா நிறுவனம் மற்ற 40 விமானங்களையும் பத்து வருடத்தில் டெலிவரி செய்யும்.

# வெற்றிகரமான சோதனை



ராஜஸ்தானின் பார்மரில் உள்ள காந்தவ் பகசார் பிரிவில் தேசிய நெடுஞ்சாலை – 925ஐ அவசரகால விமான ஓடுபாதையாக பயன்படுத்தும் நிகழ்ச்சி வெற்றிகரமாக சோதனை செய்து பார்க்கப்பட்டது. இதற்காக C 130J சூப்பர் ஹெர்குலிஸ் விமானம் பயன்படுத்தப்பட்டது. அந்த விமானத்தில் மத்திய அமைச்சர்கள் நிதின் கட்கரி, ராஜ்நாத் சிங், ஏர் சீஃப் மார்ஷல் ஆர்.கே.எஸ் பதௌரியா ஆகியோர் பயணித்தனர். பாதுகாப்புத் தளபதி ஜெனரல் பிபின் ராவத், லஷ்மிகாந்த் பரத்வாஜ் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். இந்த சோதனையில் சுகோய் Su30 MKI போர் விமானமும் தரையிறக்கி சோதனை செய்யப்பட்டது.

# ராணுவ கல்லூரியில் பெண்கள்



தேசிய ராணுவ கல்லூரியில் சேர பெண்கள் விரும்புகின்றனர். தகுதியும் ஆர்வமும் இருந்தாலும் பெண்கள் என்ற காரணத்தால் அவர்களை அனுமதிப்பதில்லை என கூறி வழக்கறிஞர் குஷ் கல்ரா உச்ச நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்தார். இதற்கு பதில் அளித்த மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஐஸ்வர்யா, 'தேசிய ராணுவ கல்லூரியில் பெண்களை சேர்ப்பது என ராணுவ உயர்நிலைக் குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக சில நடைமுறைகளை பின்பற்ற வேண்டி உள்ளது, கட்டமைப்பில் சில மாற்றங்களை செய்ய வேண்டி உள்ளது எனவே இந்த ஆண்டு பழைய நிலையே தொடரும்' என்றார். இவ்வழக்கை விசாரித்த நீதிபதிகள், ராணுவத்தின் முடிவு மகிழ்ச்சி அளிக்கிறது என தெரிவித்தனர்.

# விவசாயிகளின் நலனில் அக்கறை



விவசாயிகள் நலனில் அக்கறை காட்டி புதிய வேளாண் கொள்கைகள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது மத்திய அரசு. அவ்வகையில், ரபி பருவ பயிர்களுக்கு 2022 2023க்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை (எம்.எஸ்.பி) கடந்த ஆண்டைவிட அதிகரித்து அறிவித்துள்ளது. அதன்படி, ஒரு குவிண்டாலுக்கான எம்.எஸ்.பியாக, கோதுமைக்கான ரூ. 2,015, பார்லிக்கு ரூ. 1,635,, கடுகுக்கான எம்.எஸ்.பி ஒரு குவிண்டாலுக்கு ரூ. 5,050, மசூர் தாலுக்கு ரூ. 5,500, கடலைக்கு ரூ. 5,230, குஷிபீ எண்ணை வித்துகளுக்கு ரூ. 5,441 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த எம்.எஸ்.பி அதிகரிப்பு மத்திய பட்ஜெட் 201819 அறிவிப்புக்கு ஏற்ப செயல்படுத்தப்பட்டுள்ளது. இது, அகில இந்திய நிகர எடை சராசரி உற்பத்தி செலவினையொட்டி குறைந்தபட்சம் 1.5 மடங்கு அதிகமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதனல், விவசாயிகளின் வருமானம் கணிசமாக அதிகரிக்கும்.

# 20 ஆண்டுகளில் 350 போர் விமானங்கள்



இந்திய ஏரோஸ்பேஸ் துறை சார்ந்த மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய இந்திய விமானப்படை தலைமை தளபதி ஏர் சீஃப் மார்ஷல் பதௌரியா, 'அடுத்த 20 ஆண்டுகளில் இந்திய விமானப்படை சுமார் 350 உள்நாட்டு தயாரிப்பு போர் விமானங்களை படையில் இணைக்க திட்டமிட்டு உள்ளது. இலகுரக தேஜாஸ் மார்க்1, தேஜாஸ் மார்க்2 ஐந்தாம் தலைமுறை ஆம்கா உள்ளிட்ட அதிநவீன இந்திய தயாரிப்பு விமானங்கள் இவற்றில் அடங்கும் என தெரிவித்தார்.

## சதி முறியடிப்பு



ஜார்க்கண்ட் மாநிலம் பொகாரோவில் பாதுகாப்பு படையினரை குறிவைத்து மாவோயிஸ்ட்டுகளால் புதைக்கப்பட்டிருந்த 15 கிலோ மேம்படுத்தப்பட்ட வெடிபொருள் (ஐ.இ.டி) யை சி.ஆர்.பி.எப் வீர்ர்களும் மாநில காவல்துறையினரும் கண்டறிந்து மீட்டனர். பின்னர், வெடிபொருள் செயலிழப்பு அதிகாரிகள் அந்த வெடிபொருளை செயலிழக்க செய்தனர். இதனால் பெரும் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது. வீரர்கள் அங்கு தேடுதல் வேட்டையை துவங்கியுள்ளனர்.

## துருவ் வாங்க விருப்பம்



பிலிப்பைன்ஸ் நாட்டு கடலோர காவல்படை நமது நாடு சொந்தமாக தயாரிக்கும் துருவ் வானூர்திகள் மீது ஆர்வம் காட்டி வருகிறது. தங்கள் நாட்டின் பாதுகாப்பிற்காக விரைவில் 7 துருவ் வானூர்திகள் வரை பிலிப்பைன்ஸ் கடலோர காவல்படை வாங்கலாம் என கூறப்படுகிறது. மேலும் நமது நாடு சொந்தமாக தயாரித்து இயக்கி வரும் டோர்னியர் 222 ரக விமானங்களையும் வாங்க அந்த நாடு ஆர்வமாக உள்ளது என கூறப்படுகிறது.

## கோல் இந்தியா வழங்கிய நிதி




மத்திய அரசின் கோல் இந்தியா லிமிடெட் நிறுவனம், சி.எஸ்.ஆர் எனப்படும் பெருநிறுவன சமூகப் பொறுப்பின் ஒரு பகுதியாக, இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் கீழ் வரும் தேசிய விளையாட்டு மேம்பாட்டு நிதி NSDF க்கான பங்களிப்புக்காக 75 கோடி நிதியளித்துள்ளது. மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் அனுராக் தாக்கூர், மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் நிசித் பிரமானிக், கோல் இந்தியா எல்.எம்.டி அதிகாரிகள் முன்னிலையில் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. விளையாட்டு அகாடமிகளில் பயிற்சி பெறும் விளையாட்டு வீரர்கள் தங்குவதற்காக கட்டப்பட உள்ள மூன்று தங்கும் விடுதிகளுக்கு கோல் இந்தியா அளித்த நிதி பயன்படுத்தப்படும். இதுவரை பொதுத்துறை நிறுவனங்களிடம் இருந்து சி.எஸ்.ஆர் பங்களிப்பாக ரூ. 170 கோடி விளையாட்டுத்துறை மேம்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசு அதற்காக ரூ. 164 கோடி வழங்கியுள்ளது.

# அமேசானுடன் கை கோர்க்கும் குஜராத் அரசு




குஜராத் மாநிலத்தில் சிறு குறு தொழில்களை ஊக்குவிக்கவும் ஏற்றுமதியை அதிகரிக்கவும் வசதியாக அமேசான் நிறுவனத்துடன் அம்மாநில அரசு கைகோர்த்துள்ளது. அமேசானின் 200க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு தங்கள் பொருட்களை விற்க இந்த நிறுவனங்களுக்கு தேவையான இ காமர்ஸ் பயிற்சிகளை அளிக்கும்.அதன் 17 வெளிநாட்டு சந்தைகளுக்கு அணுகலையும் வழங்கும். அமேசான் ஏற்கனவே 70,000 க்கும் மேற்பட்ட பாரத ஏற்றுமதியாளர்களின் பொருட்களை விற்பனை செய்து வருகிறது. இதன் மதிப்பு 3 பில்லியன் டாலர்கள். தற்போது போடப்பட்டுள்ள இந்த ஒப்பந்தம், வரிசையாக வரவிருக்கும் பண்டிகைக் காலத்தையொட்டி முக்கியத்துவம் பெறுகிறது.

# விவசாய மறுமலர்ச்சி தொகுப்பு



பிரதமர் தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவை குழு (CCEA), வடகிழக்குப் பகுதிகளில் விவசாயிகளுக்கான மறுமலர்ச்சி தொகுப்புகளை அறிவித்துள்ளது. அதன்படி, 77.45 கோடி ரூபாய் புதுப்பித்தல் தொகுப்பு நிதியாகவும், விவசாய செயல்முறை ஆதரவு நிதியாக ரூ. 17 கோடியும், நிதி சாராத விவசாய ஆதரவு பணிகளுக்காக ரூ. 60.45 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த மறுமலர்ச்சி தொகுப்பைச் செயல்படுத்துவதன் மூலம், வடகிழக்குப் பகுதி விவசாயிகளின் விளைபொருட்களுக்கான சரியான விலை உறுதி செய்யப்படும். மதிப்பு கூட்டல், தொழில் முனைவோர் ஊக்குவிப்பு, சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் நேரடியாகவும் மறைமுகமாகவும் சுமார் 33,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். நல்ல விவசாய வசதிகள், விவசாயிகளுக்கு குழுப் பயிற்சிகள், இயற்கை விதைகள், உரங்கள், அறுவடைக்கு பிந்தைய வசதிகள், உலக அளவிலான கண்காட்சி, நிகழ்ச்சிகளில் அவர்களின் தயாரிப்புகளை காட்சிப்படுத்துதல் போன்ற பல்வேறு புதுமையான திட்டங்களை செயல்படுத்த இந்த மறுமலர்ச்சி தொகுப்பு உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ராணுவ தளவாட தொழில் வழித்தடம்

உத்தரபிரதேசத்தில் பாதுகாப்புத் தளவாட உற்பத்தித் துறைக்கு ஊக்கம் அளிக்கும் விதமாக வரும் செப்டம்பர் 14 அன்று 'டிபென்ஸ் காரிடார்' எனப்படும் ராணுவ தளவாட தொழில்வழிதட முனையத்தை அலிகரில் நடைபெற உள்ள ஒரு நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி துவக்கி வைக்க உள்ளார். அன்று ராஜ மகேந்திர பிரதாப் மாநில பல்கலைக்கழகத்திற்கும் பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார். உத்தரபிரதேச அரசு அமைக்க உள்ள ஆறு ராணுவ தளவாட தொழில்வழித் தட முனையங்களில் அலிகார் முனையமும் ஒன்று. ஆக்ரா, ஜான்சி, சித்ரகூட், கான்பூர், லக்னோ ஆகியவை மற்ற ஐந்து முனைகள் ஆகும். அலிகார் முனையத்தில் ஏற்கனவே விண்ணப்பித்த நிறுவனங்களில் 19 நிறுவனங்களுக்கு முழுமையாக நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. அம்மாநில அரசின் கொள்கை, செயல்பாடுகளால் இந்த முனையத்தில் உள்ள அனைத்து நிலங்களும் விற்றுத் தீர்ந்துவிட்டன. உத்தரபிரதேச அரசு அலிகரில் 22 பாதுகாப்பு நிறுவனங்களுக்கு 74 ஹெக்டேர் நிலத்தை ஒதுக்கியுள்ளது. இங்கு பல்வேறு பாதுகாப்பு தளவாட நிறுவனங்கள் சுமார் 1,250 கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளன.



# பாத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டனர்




இரண்டு நாட்களுக்கு முன் ஆப்கானிஸ்தானில் ஆட்சி அதிகாரத்தில் உரிமை, பெண்களுக்கு கல்வி, வேலைவாய்ப்புகள் உள்ளிட்ட சுதந்திரம் கேட்டு பெண்கள் வீதியில் இறங்கி போராடினர். ஒரு பெண் தலிபானின் துப்பாக்கியை எதிர்த்து தைரியமாக நின்றார் என்பது உள்ளிட்ட பல செய்திகள் வெளியாகின. ஆனால், அந்த நிகழ்வை படம் பிடித்த பத்திரிகையாளர்கள் நிலைதான் பரிதாபமாக மாறிவிட்டது. ஆப்கானிஸ்தானின் எடிலாட்ரோஸ் செய்தித்தாள் நிறுவனத்தை சேர்ந்த இரண்டு பத்திரிகையாளர்கள், தௌகி டர்யாபி, நேமத்துல்லா ஆகிய இருவரும்தான் இந்த செய்தியை படமாக்கினர். அவர்களை அங்கே இருந்து அழைத்து சென்ற தலிபான்கள், நான்கு மணி நேரம் சிறை வைத்து, சவுக்கால் கடுமையாக அடித்து துன்புறுத்தினர். பின்னர் விடுவிக்கப்பட்ட அவர்கள், சக பத்திரிகையாளர்களால் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். தலிபான்களால் பிடிக்கப்பட்ட மற்ற பத்திரிகையாளர்களும் பின்னர் விடுவிக்கப்பட்டனர். முன்னதாக, தலிபான்களால் பாரதத்தின் டேனிஷ் சித்திகி, ஜெர்மனி டி.டபள்யு செய்தி நிறுவன ஔப்பதிவாளர் என சிலர் கொல்லப்பட்டனர், சி.என்.என் பத்திரிகையாளர் உட்பட பலர் தாக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# விநாயகர் சதுர்த்தி



பரமசிவன் விநாயகரை கணங்களின் தலைவனாக 'கணபதி'யாக நியமித்தார். ஆவணி மாதத்தில் வருகின்ற இரண்டு சதுர்த்தி விரதங்களும் முக்கியமானவை. எனினும் விநாயக சதுர்த்தி விரதமே அதிவிஷேமானது. அந்நாளில் விரதம் அனுஷ்டித்து வழிபடுபவர்களுக்கு விநாயகரின் அருளும், சுகபோக சௌபாக்கியங்களும் கிடைக்கப் பெறுவது நிச்சயம் என்று கூறுவர்.

ஆண்டு தோறும் 'ஆவணி மாத சுக்ல சதுர்த்தியன்று மண்ணாலான என் உருவத்தை பொன்னால் செய்த பாவனையுடன் அமைத்து பல பூக்களால் பூஜித்த பின் இரவில் கண் விழித்து முறையாகப் பூஜிப்பவருக்கு அவன் தொடங்கிய காரியத்தில் வெற்றியையும், ஸகல காரியங்களில் சித்தியையும் அளிக்கிறேன்' என்று விநாயகரே சந்திரனுக்குக் கூறுவதாக அமைந்துள்ளது. சியமந்தக மணி என்ற ரத்தினத்தின் காரணமாகப் பல அபவாதங்களுக்கு ஆளான கிருஷ்ணனுக்கு நாரதர் இக்கதையைக் கூறி, கிருஷ்ணனே சங்கடஹர சதுர்த்தி பூஜை செய்து அவப்பெயர் நீங்கப் பெற்றார் என்றும் புராணங்கள் வாயிலாக அறிகிறோம்.

அற்பத் தாவரமான புல்லையும் (அருகம்புல்) அவர் ஏற்றுக் கொள்கிறார். காட்டுப்பூவான எருக்கம்பூவைக் கூட அவர் மறுப்பதில்லை. அவரைப் பொறுத்தவரை புல் மாலை போட்டவரும் ஒன்றுதான்; ரோஜா மாலை போட்டவரும் ஒன்றுதான். வித்தியாசமே பார்க்க மாட்டார். தன்னை வணங்குபவரின் மனம் சுத்தமாக இருக்கிறதா, அந்த மனதில் தனக்கு எத்தகைய இடம் இருக்கிறது என்பதை மட்டும்தான் பார்ப்பார்.

பூமியிலிருந்து உருவான எதுவும் பூமிக்கே திரும்பப் போகவேண்டும் என்ற தத்துவம்தான் களிமண் பிள்ளையார். களிமண் மட்டும்தான் என்றில்லாமல், உலோகம், கற்சிலை விக்ரகங்களையும் வைக்கலாம். விநாயகருக்கு மிகவும் பிடித்தமான மோதகத்திலும் ஒரு தத்துவம் இருக்கிறது. மேலே இருக்கும் மாவுப் பொருள்தான் அண்டம். உள்ளே இருக்கும் வெல்லப் பூர்ணம்தான் பிரம்மம். அதாவது நமக்குள் இருக்கும் இனிய குணங்களை மாயை மறைக்கிறது. இந்த மாயையை உடைத்தால் அதாவது வெள்ளை மாவுப் பொருளை உடைத்தால், உள்ளே இனிய குணமான வெல்லப் பூர்ணம் நமக்குக் கிடைக்கும்.

நாமும் நம் குடும்பமும் உலகமும் நன்றாக இருக்க வேண்டும் என்ற வேண்டுதலோடு, கொரோனா பிணி நீங்க வேண்டும், கொரோனாவை காரணம் காட்டி நம்மை ஒடுக்குவோர் மாற வேண்டும், உலகின் குருவாக பாரதம் உயர வண்டும் என்ற பிராத்தனையையும் அந்த மூல முதல்வனிடம் முன்வைப்போம்.